[1st August 1966

காண்பது மட்டுமன்றி சில நாட்கள் தங்கியிருக்கவும் வேண்டிய அடிப்படையில் திட்டம் தயாரிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : விரிவானதொரு திட்டம் மத்திய அரசாங்கம் நம் அரசாங்கக் கூட்டோடு தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்டம் முழுமையும் பற்றி இந்தச் சமயத்தில் வெளியிட வேண்டாம் என்று நினைக்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த மாமல்லபுர வளர்ச்சித் திட்டத்தில் செங்கல்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றம் வழியாக மின் இரயில் இணைக்க ரெயில்வே இலாகா ஏதாவது செய்ய வேண்டுமென்று நம் அரசாங்கம் ஏதாவது கேட்டிருக்கிறதா? அப்படி இல்லாவிட்டால் அதையும் சிபார்சு செய்யுமா? அதாவது, திருக்கழுக்குன்றம் வழி மகாபலிபுரத்திற்கு மின் ரெயில் விடுவதற்கு.

கனம் திரு. கோ. பூவராகன் : மகாபலிபுரத்திற்குப் பிரயாணிகள் வந்து போவது பற்றிய கேள்வி இது. அதற்குத் தக்க விதத்தில் அதை மேலும் விரிவுபடுத்துவதுபற்றிய கேள்வி இது. அது சம்பந்தமாக ஒரு மாஸ்டர் பிளான் தயாரித்துக் கொண்டிருக்கிறோம் என்று பதில் கூறினேன். ரெயில் தொடர்பு கொடுப்பது பற்றி அது சம்பந்தமான இலாக்கா அமைச்சர் அவர்களிடம் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. சா. கணேசன் : இந்தத் திட்டத்தைப் பற்றித் தெரிவிப்பதால் எந்தவிதமான முறையிலும் பந்தோபஸ்துக் குறைவோ அல்லது வருத்தமோ துன்பமோ அல்லது துயரமோ எதுவும் ஏற்படக்கூடிய நிலை இல்லை. இந்தத் திட்டத்தைப் பற்றி தெரிவிப்பது நல்லதல்ல என்று பொருள்பட அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படித் திட்டத்தில் என்ன அந்தரங்கம் அல்லது இரகசியம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : எவ்வளவு தேர்ந்தெடுக்கப் போகிறோம், எங்கெங்கு எடுக்கப் போகிறோம் என்று சொன்னால் பக்கத்தில் உள்ள நிலங்களின் விலை உயர சந்தர்ப்பம் இருக்கும். ஆகவே, வெளியிட வேண்டாமென்று சொன்னேன்.

Yercaud Township Committee

* 19 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Yercaud Township Committee has been constituted; and

(*b*) if so, the names of members of the Committee and the basis on which they were selected?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

11-30 a.m. (இ) 'டவுன்ஷிப்' குழுவின் உறுப்பினர்கள் கீழ்க்கண்டவர்களாவர் :—

(1) சேலம் மாவட்டக் கலெக்டர். (தலைவர்).

1st August 1966]

உறுப்பினர்கள் :

(2) ஆதிவாசி வளர்ச்சி வட்டாரங்களில் மேம்பாட்டிற்க., கோட்டப் பொறியியல் தனி அதிகாரி.

(3) மாவட்டச் சுகாதார அதிகாரி, சேலம்.

(4) மாவட்ட நல அதிகாரி, சேலம்.

(5) வருவாய்த் துறைக் கோட்ட அதிகாரி, சேலம்.

(6) திரு. எம். எஸ். பி. ராஜேஸ், ஏற்பாடு பஞ்சாயத்து மன்றத்தின் முன்னாள் தலைவர்.

(7) ஸ்ரீ அய்யாசாமிப் பிள்ளை.

(8) ஏர்க்காடு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை உறுப்பினர்.

(9) திரு. பி. கே சின்னசாமி, முண்டகம்பாடி

பற்றுள்ள அனைவருக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், ஏர்க்காடு பகுதியில் நிறைய காப்பித் தோட்டங்கள் இருக்கின்றன. ஆகவே, தோட்டத் தொழிலாளர்கள் அங்கு நிறைய இருக்கிறார்கள். இந்தத் தொழிலாளர்களுக்கு இதில் ஏன் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லை?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கூடுமான வரைக்கும் எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்பது தான் கருத்து. இதில் நான் அபிப்பிராயமாக இருப்பது நான்கு பேர்கள். இதில் எல்லோருடைய இன்டரஸ்டுக்கும் திருப்தி அளிக்கக்கூடிய வகையில் தான் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : கனம் சபாநாயகர் அவர்களே, ஏர்க்காடு வட்டாரம் முழுவதும், அதாவது அந்த பிளாக் முழுவதும் டவுன்ஷிப்பாக எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவ்விதம் இல்லாமல் குறுகிய ஒரு சில மைல்கள் சுற்றளவுக்கு மட்டும் டவுன்ஷிப் அமைத்துவிட்டு மற்ற இடங்களை எல்லாம் வட்டார அபிவிருத்தியிடமாகவே விட்டுவிட்டால் தான் சௌகரியமாக இருக்கும். அதன் மூலம் அந்தப் பகுதி பலன் அடைய முடியும் என்று அந்தப் பகுதியிலுள்ள மக்கள் சொல்லுகிறார்களே, இதைப்பற்றி அரசாங்கம் கவனித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இது சம்பந்தமாக ஒரு ரிட் ஹைகோர்ட்டில் இருப்பதால் இதைப்பற்றி மேலும் நான் பதில் அளிக்க விரும்பவில்லை.

Bus-stand for Tiruchengode Town

* 20 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to construct a bus-stand in Tiruchengode Town?